# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் - 08 | சைவநெறி | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ......................

## பகுதி I

❖ பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. உலகைப் படைத்துக் காத்து அழிக்கும் சக்தி.
    1) ஆன்மா 2) பசு 3) கடவுள் 4) மாயை.

02. கடவுளின் வியாபகத் தன்மையைக் கூறும் சிறப்பான உபநிடதம்.
    1) கேன உபநிடதம் 2) முண்டக உபநிடதம்
    3) கட உபநிடதம் 4) சாந்தோக்கிய உபநிடதம்

03. சிவபெருமான் பார்வதியைத் திருமணம் செய்த நாள்.
    1) பங்குனித் திங்கள் 2) ஆனி உத்தரம்
    3) பங்குனி உத்தரம் 4) வைகாசி விசாகம்

04. மனதை ஒருநிலைப்படுத்திப் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்துவது.
    1) விரதங்கள் 2) பண்டிகைகள்
    3) விழாக்கள் 4) விருந்துபசாரங்கள்.

05. தேவாசிரியன் மண்டபம் அமைந்துள்ள ஆலயம்.
    1) திருமறைக்காடு 2) திருவாரூர்
    3) திருக்கோலக்கா 4) திருக்கோளிலி

06. தெய்வீக உணர்வு பெருகவும் சமய ஒழுக்கத்தைப் பேணவும் தொகுக்கப்பட்டவை.
    1) திருமுறைகள் 2) நூல்கள்
    3) விரதங்கள் 4) கொண்டாட்டங்கள்.

07. சிவபுராணங்களின் எண்ணிக்கை
    1) ஒன்று 2) பன்னிரண்டு 3) பதின்நான்கு 4) பத்து.

08. சிவன் நஞ்சுண்டமையால் பெற்ற பெயர்.
    1) நீலகண்டர் 2) சந்திரசேகரர் 3)கங்காதரர் 4) பிறைசூடி

09. சிவபக்தனான இலங்கை அரசன்.
    1) இராமன் 2) அனுமன் 3) இராவணன் 4) சுக்ரீவன்.

10. காளத்திமலையிலுள்ள இறைவன் பெயர்.
1) காளத்திநாதர் 2) தியாகேசர் 3) சொக்கநாதர் 4) தோணியப்பர்.

11. சித்திரை வருடப்பிறப்பில் சூரியன் புகும் இராசி.
1) மகரம் 2) கும்பம் 3) மீனம் 4) மேடம்.

12. திருப்பல்லாண்டு பாடியவர்.
1) சேந்தனார் 2) கருவூர்த்தேவர்
3) சேக்கிழார் 4) கபிலதேவர்

13. ஆண்கள் செய்யும் நமஸ்காரம்.
1) ஏகாங்க நமஸ்காரம் 2) பஞ்சாங்க நமஸ்காரம்
3) திரியாங்க நமஸ்காரம் 4) அட்டாங்க நமஸ்காரம்.

14. திருஞானசம்பந்தர் குருபூசைத்தினம்.
1) சித்திரைச்சதயம் 2) ஆவணி மூலம்
3) ஆடிச்சுவாதி 4) வைகாசி மூலம்

15. சைவ சமயத்தவர் தமது பிறந்த நாளைக் கொண்டாடுவது.
1) பிறந்த தமிழ்த் திகதி 2) பிறந்த கிழமை
3) பிறந்த மாத நட்சத்திரம் 4) பிறந்த ஆங்கிலத் திகதி.

16. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற குறிக்கோளுடையவர்.
1) திருஞான சம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) சுந்தரமூர்த்தி நாயனார். 4) மாணிக்கவாசகர்

17. சிவபுராணம் இடம்பெறும் நூல்.
1) திருவிசைப்பா 2) திருப்பல்லாண்டு
3) திருக்கோவையார் 4) திருவாசகம்.

18. நாவலர் பெருமான் விட்டுச் சென்ற பணிகளைப் பேணிய, மிருகபலியை எதிர்த்த சமயசீர்திருத்தவாதி.
1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் 2) இந்து. போட். சு. இராசரத்தினம்
3) சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் 4) சுவாமி விபுலானந்தர்

19. அபிஷேகப் பிரியர்.
1) விநாயகர் 2) சிவன் 3) முருகன் 4) விஷ்ணு

20. பஞ்சபுராணத்தில் நான்காவதாகப் பாடப்படுவது.
1) தேவாரம் 2) திருவாசகம் 3) திருவிசைப்பா 4) திருப்பல்லாண்டு

(2X20=40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாகப் பிழையின்றி எழுதுக. எழுதிப் பாடியவர் பெயர், தலம் என்பவற்றைத் தருக.

1) "நீள நினைந்தடியேன் ……………"

2) "தில்லைவாழந்தணர் ………………"

3) "பாரொடு விண்ணாய் ……………"

4) "ஏக நாயகனை……………"

5) "மிண்டு மனத்தவர் …………………" (7+ ½ + ½ X2=16 புள்ளிகள்)

02. "இறையுணர்வும் மனவலிமையும் தருவன விரதங்கள் ஆகும்".

1) விரதம் என்பதற்கு வரைவிலக்கணம் யாது?

2) விரதத்திற்குரிய பொதுவான விதிமுறைகள் 3 தருக?

3) வருடம் ஒருமுறை அனுட்டிக்கும் விரதங்கள் 5 தருக?

4) ஆனி உத்தரத்தின் தத்துவம் யாது?

(2+3+3+3=11 புள்ளிகள்)

03. "மெய்யடியார் வரலாறு கூறுவது பெரியபுராணமாகும்"

1) சமய குரவர் நால்வரையும் வரிசையாகத் தருக?

2) சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த நாடு, பிறந்த ஊர், பெற்றோர் பெயர், இளமை பெயர், என்பவற்றைத் தருக?

3) மாணிக்கவாசகர் செய்த தொழில் யாது? பாடிய திருமுறை எது?

4) திருஞான சம்மந்தர் பெற்ற விருதுகள் யாவை?

(2+3+3+3=11 புள்ளிகள்)

04. "திருமுறைகளில் பஞ்ச புராணங்கள் இடம்பெறுகின்றன."

1) பஞ்ச புராணங்களையும் வரிசையாகத் தருக?

2) திருப்பல்லாண்டு என்ற சொல்லின் பொருள் யாது? இடம்பெறும் திருமுறை எது?

3) சுந்தரர் பாடிய திருமுறை எது? மாணிக்கவாகர் பாடிய பாடல் வகைகள் யாவை?

4) பஞ்ச புராணம் ஓதும் போது கடைப்பிடிக்க வேண்டியவை எவை?

(2+3+3+3=11 புள்ளிகள்)

05. "ஆன்மா லயப்படும் இடம் ஆலயமாகும்"

1) ஆலய வழிபாடு பற்றிய கூற்றுக்கள் இரண்டு தருக?

2) ஆலயத்திற்குச் செல்லும் முறையைச் சுருக்கமாகத் தருக?

3) பஞ்சாங்க நமஸ்காரம் செய்யும் முறையை எழுதுக?

4) விநாயக வணக்க முறைகள் மூன்று தருக?

(2+3+3+3=11 புள்ளிகள்)

06. "தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நன்மை தருவன பண்டிகைகளாகும்"

1) நீர் கொண்டாடும் பண்டிகைகளைத் தருக?

2) "பண்டிகை" என்றால் என்ன?

3) புத்தாண்டுப் பண்டிகையில் இடம்பெறும் செயற்பாடுகளை வரிசைப்படுத்துக?

4) நிறைகுடம் வைக்கும் சந்தர்ப்பங்கள் யாவை?

(2+3+3+3=11 புள்ளிகள்)

07. காலந்தோறும் மெய்யடியார் தோன்றிச் சைவசமயத்தை வளர்த்தனர்"

1) கண்ணப்பரது இளமைப் பெயர் யாது? இவர் இரவும் பகலும் காளத்தியப்பருக்குச் செய்த தொண்டுகள் எவை?

2) கண்ணப்பரது பூசை முறையை எழுதுக?

3) கண்ணப்ப நாயனாரது வரலாறு எமக்கு எடுத்துக் காட்டுவது யாது?

4) சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாரின் சிறப்புகள் எவை?

(2+3+3+3=11 புள்ளிகள்)

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**